# சங்க இலக்கியம் புலப்படுத்தும் நிலமும் மக்களின் வாழ்வும்

*முனைவர் மா. சங்கரேஸ்வரி*
உதவிப்பேராசிரியர்
கா.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி (தன்னாட்சி), கோவில்பட்டி
https://doi.org/10.5281/zenodo. 14383100

**ஆய்வுச்சுருக்கம்**

*இயற்கை வளங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு நிலமக்களின் வாழ்வியல் முறைகளும் வேறுபடுகின்றன. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர நீரும், நிலமும் சரிவர அமைய வேண்டும். ஐவகை நில மக்களின் அக, புற வாழ்க்கையும் நிலவளத்திற்கு ஏற்ப வேறுபட்டு இருந்தன. அகவாழ்க்கையில் பொழுதும் ஒழுக்கமும் நிலத்துடன் ஒன்றிணைந்திருந்தது. தினைப்புனம் காத்தல் களவு வாழ்க்கையின் தொடக்கமாகும். ஏனெனில் தலைவன் – தலைவி சந்திப்பு, பகற்குறி, இற்செறிப்பு இவற்றுக்கு தினைப்புனம் காத்தல் ஒரு காரணமாக அமைகின்றது. மேலும், நிலவளத்தில் மருத நில மக்களின் பொருளாதாரம் உயர்ந்து காணப்பட்டது. தொழில்கள், பழக்கவழக்கங்கள், விளையாட்டுகள், குடியிருப்பு போன்றனவும் நிலவளத்திற்கேற்ப வேறுபட்டு அமைந்துள்ளதை சங்க இலக்கியங்கள் கூறுகின்றது.*

## அகவாழ்க்கை

### நிலமும் பொழுதுகளும்

*நிலமும் பொழுதும் முதற்பொருள் ஆகும். முதற்பொருள் என்பது எல்லாவற்றிற்கும் முதன்மையாக விளங்குவதாகும். நிலமும் பொழுதும் மக்களின் வாழ்க்கைக்கு அடித்தள ஆதாரமாக அமைகின்றது. பொழுதுதான் நிலத்தின் தன்மையை எடுத்துரைக்கின்றது. பொழுதுகளை இருவகைப்படுத்தலாம். அவை பெரும்பொழுது, சிறுபொழுது ஆகும். ஓர் நாளுக்குரியது சிறுபொழுதாகும். ஓர் ஆண்டுக்குரிய பருவங்கள் பெரும் பொழுதாகும். பெரும்பொழுதைப் பகுதியாகவும், சிறுபொழுதைப் பிரிவாகவும் பிரித்துக் கூறினர். பெரும் பொழுதில் கார்காலம், கூதிர்காலம், வேனிற்காலம், முன்பனிகாலம், பின்பனிகாலம். இவை நிலத்தோடு தொடர்புடையதாகும். கார்காலத்தில் மழைப் பொழிவு ஏற்படும். இப்பருவம் நிலத்தின் தன்மையை மாற்றி விடுகின்றது. முதுவேனில் காலத்தில் மழை பெய்யாமையால் நிலங்கள் வறண்டு வெம்மையுடையதாக மாறி விடுகின்றன. சிறுபொழுதுகளில் மாலை பொழுது அகவாழ்க்கையில் நெருங்கிய தொடர்பு உள்ளதாக இருக்கின்றது.*

### நிலமும் ஒழுக்கமும்

*திணை என்பது நிலம், ஒழுக்கம் என்ற பொருளைத் தருகின்றது. நிலமும், ஒழுக்கமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகும். தொல்காப்பியர் வகுத்த ஐவகை ஒழுக்கங்கள் நில அமைப்பிற்கு ஏற்ப அமைந்துள்ளன.*

*சங்க காலத்தில் ஐவகை நிலத்திற்கு ஏற்ப உப்பொருள் பிரிக்கப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்திற்கு "புணர்தல்" ஒழுக்கமாகும். புணர்தல் மற்ற நிலங்களிலும் நிகழ்கின்றது. இருப்பினும் குறிஞ்சி நிலத்தில் புணர்தல் சிறப்பிற்குரியது என்ற முறையில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதற்கு மலைப்பகுதியும், சூழ்நிலையும் காரணமாக அமைகின்றன. பிற ஒழுக்கங்களும் குறிஞ்சி நிலத்தில் வரக்கூடும்.*

*உரிப்பொருள் - குறிப்பிட்ட நிலத்துக்குரிய அகச்செயற்பாடு. உதாரணமாக மலைப் பகுதிக்குப் புணர்தலும் புணர்தல் நிமித்தமும்*

*என்று கார்த்திகேசு சிவத்தம்பி குறிப்பிடுகிறார் (பெ.மாதையன், அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், ப.35).*

*குறிஞ்சி நிலம் மலை சார்ந்த பகுதி என்பதால் புணர்தல் நடைபெறுகிறது. மலை குளிர்ச்சித்தன்மையுடையதாக இருக்கின்றது. நிலத்தின் தன்மை, சுற்றியிருக்கும் காடு இவைகள் புணர்ச்சி தோன்ற காரணமாக அமைகிறது.*

*முல்லை நிலத்திற்கு ''இருத்தலும் இருத்தல் நிமித்தமும்'' ஆகும். இருத்தல் என்பது தலைவன் விரைவில் பொருள் தேடிக்கொண்டு திரும்பி வர வேண்டும் என்று எதிர்பார்த்து காத்திருப்பது ஆகும். தலைவன் புறவொழுக்கத்திற்காக பிரியும் போது தலைவி ஆற்றிக்கொண்டு இருப்பது ஆகும். வினைவயிற்பிரிந்து செல்லும் தலைவன் குறித்த பருவத்தில் வருவதாகக் கூறிச் செல்கின்றான். குறித்த பருவம் வந்தும் தலைவன் வரவில்லை. தலைவன் குறித்த பருவத்தை, காடும், காட்டுப் பொருள்களும் தலைவிக்கு நினைவூட்டுகின்றன. நிலத்தின் தன்மையை அறிந்து தலைவி தன் ஆற்றாமையை வெளிப்படுத்துகின்றாள்.*

*மருத நிலத்திற்கு ''ஊடலும் ஊடல் நிமித்தமும்'' ஆகும். அகவொழுக்கத்திற்காகத் தலைவியை விட்டுத் தலைவன் பிரியும் பிரிவின் போது ஏற்படும் ஒழுக்கம் ஊடல் ஆகும். ஊடல் தோன்றக் காரணம் தலைவன் பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்டதுதான். மருதநிலம் வயல் சார்ந்த பகுதி என்பதால் உழவுத் தொழில் சிறந்து விளங்கியது. செல்வச் செழிப்பான நிலை மருதநிலத்தில் காணப்படுகிறது. மருதம் தன்னிறைவு பெற்ற நிலையில் மனிதன் வேறொன்றைத் தேடி அலையும் நிலைக்குத் தள்ளப்படுகின்றான். இந்நிலையில் அகவொழுக்கம் ஏற்படுகிறது.*

*நெய்தல் நிலத்திற்கு ''இரங்கலும் இரங்கல் நிமித்தமும்'' ஆகும். முல்லை நிலத்தில் தலைவன் தொழிலுக்காகச் செல்லும் போது ஆற்றியிருப்பர். நெய்தல் நிலத்தில் தலைவன் பொருளுக்காகச் செல்லும் போது இரங்குவர். இருத்தல் என்பது தலைவன் எப்படியும் திரும்பி வந்து விடுவான் என்று எதிர்பார்த்துக் காத்திருப்பது. நெய்தல் நிலத்தில் அப்படியன்று. கடலுக்குச் சென்ற தலைவன் உயிருடன் வருவானா? மாட்டானா என்று வருத்தமுடன் இருப்பது ஆகும். நெய்தல் நிலத்தில் தலைவன் தொழிலின் பொருட்டு இரவு நேரத்தில் செல்லுகின்றான். இரவு நேரத்தில் தொழிலுக்குச் சென்றதாலும் கடல் சூழ்ந்து இருப்பதாலும் வருத்தத்துடன் தலைவி இருக்கின்றாள். கடலில் எந்த ஆபத்தும் நிகழாமல் தலைவன் திரும்பி வர வேண்டும் என்று தலைவி வருத்தத்துடன் இருப்பதாகும்.*

*பிரிவு என்பது எல்லா நிலத்திலும் இருக்கின்ற ஒன்றாகும். இவை தற்காலிகமாக தொழிலின் பொருட்டு சென்று வரும் பிரிவாகும். பிரிவு என்பது எல்லாத்திணைக்கும் பொதுவானதாகும். பொதுவாகக் கூறப்பட்டு இருப்பதால் பாலையை ''நடுவண்திணை'' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். பொருளின் பொருட்டு செல்லக்கூடியவர்கள் பாலை நிலத்தை கடந்து தான் செல்ல வேண்டும். பாலை நிலத்தில் நிலவும் பிரிவு, பொருளுக்காகத் தன் சொந்த மண்ணை விட்டுச் செல்வதாகும். பொருளுக்காக மட்டுமில்லாமல் களவொழுக்கம் மேற்கொண்ட தலைவன் - தலைவி இருவரும் உடன்போக்கில் கடந்து செல்லக்கூடிய இடம் பாலை நிலமாகும். இடைவெளி அதிகமாக உள்ளதால் பாலை நிலத்திற்கு உரிப்பொருளாகப் பிரிவைக் குறிப்பிடுகிறார்.*

*நிலம், பொழுது, ஒழுக்கம் இவை மூன்றும் ஒன்றொடு ஒன்று தொடர்புடையதாகும். குறிஞ்சி நிலத்திற்கு காரும், கூதிரும் பெரும் பொழுதுகள் ஆகும். புணர்தல் குறிஞ்சி நிலத்திற்கு உரிய ஒழுக்கமாகும். கார்காலம் மழைபெய்யும் காலமாகும். கூதிர் ஒயாது மழைத்துளியைச் சிதறிக்கொண்டிருக்கும் காலமாகும். இரண்டு பருவங்களிலும் மக்கள் நடமாட்டாம் அதிகம் இருப்பதில்லை களவியற் புணர்ச்சிக்கு தனி இடம் சிறந்தது என்பதால் இங்கு களவொழுக்கம் கூறப்பட்டுள்ளது. சிறு பொழுதில் யாமம், நடுநாள் இரவுப்பொழுது களவிற்குரியதாகும்.*

**பிரிவாற்றாமை**

*பிரிவாற்றாமை என்பது தாம் அன்பு கொண்ட ஒருவர் தம்மைவிட்டுப் பிரிந்து செல்வதை ஆற்றாது இருத்தல் ஆகும். அன்பு மிகுதியே பிரிவாற்றாமைக்குக் காரணமாகும்.*

*இளங்காதலர்களுக்குப் பிரிதல் என்பது முகவாட்டமும் உயிர்வாட்டமும் தரும் கொடுஞ்செயலாகும் என்று வ.சுப.மாணிக்கம் குறிப்பிடுகிறார் (தமிழ்க்காதல், ப.81).*

*தலைவன் வினையின் பொருட்டுச் செல்லும் போது தலைவி பிரிவாற்றாது இருப்பாள். தலைவியின் வருத்தத்திற்கு தலைவன் செல்லக்கூடிய நிலம் காரணமாக அமைந்தது. தலைவன் வினையின் பொருட்டு செல்லும் வழி பாலைநிலமாகும். பாலை நிலத்தைக் கடந்து தான் தலைவன் வேற்றுப்புலம் செல்ல வேண்டும். பாலையின் வெம்மை, ஆறலைக்கள்வர் இவற்றின் வழி தலைவனுக்குத் துன்பம் ஏற்படும் என்று எண்ணினாள். இதனை,*

***அத்தம் அரிய என்னார், நத்துறந்து,***
***பொருள்வயிற் பிரிவார் ஆயின், இவ்வுலகத்து***
***(குறுந்தொகை,பா.174:4 - 5)***
***புலம்பு வீற்றிருந்த நிலம்பகு வெஞ்சுரம்***
***(அகநானூறு, பா. 335: 8)***
***புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை***
***(கலித்தொகை, பா. 4: 6)***
***கண் அழிந்து உலறிய பல் மா நெடு நெறி***
***வில் மூசு கவலை விலங்கிய***
***வெம் முனை அருஞ்சுரம் முன்னியோர்க்கே?***
***(நற்றிணை, பா.224:9-11)***

*என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. மேலும் பாலையில் மழை பெய்தமையால் செலவு மேற்கொள்ள இசைவு தெரிவித்தனர். நீரும், நிலமும் பயணத்திற்கு தக்கவாறு அமைய வேண்டும். பாலை நிலத்தில் மழை பெய்து காடு குளிர்ச்சியாக இருப்பதால் பயணம் இனிதாக இருந்தது. இதனை,*

***நுண்மழை தளித்தென நறுமலர் தாஅய்த்***
***தண்ணிய ஆயினும், வெய்யமன்ற -***
***மடவரல் இன் துணை ஒழியக்***
***கடம் முதிர் சோலைய காடு இறந்தோற்கே***
***(ஐங்குறுநூறு, பா.328:1 - 4)***

*என்ற அடிகள் வெளிப்படுத்துகின்றன.*

**களவு வெளிப்படல்**

*தலைவன், தலைவியின் காதல் வெளிப்பட, சூழ்நிலை காரணமாக அமைகின்றது. சூழ்நிலை என்பது சுற்றியிருக்கும் பகுதியைக் குறிப்பதாகும். நெய்தல் நிலத்தில் தலைவி இரவுக்குறியில் தலைவனைக் காணச் சென்றாள். இரவுக்குறி வீட்டின் புறத்தே மட்டுமில்லாது கடற்கரையோரத்திலும் நடைபெற்றது. தலைவனைக் கண்டு நீங்கும் தலைவியின் கூந்தலில், தேர்ச்சக்கரம் வீசிய நுண்மணலும், இலைக் குவியல்களும் படிந்து காணப்பட்டன. தலைவியின் இத்தகைய நிலையால் களவொழுக்கம் வெளிப்பட்டது. இதனை,*

***ஆழி தலை வீசிய அயிர்ச்சேற்று அருவிக்***
***கூழைபெய் எக்கர்க் குழீஇய பதுக்கை***
***புலர்பதம் கொள்ளா அளவை,***
***அலர் எழுந்தன்று, இவ் அழுங்கல் ஊரே***
***(குறுந்தொகை,பா.372:4 - 7)***

*என்ற அடிகள் விளக்குகின்றன.*

**உடன்போக்கு**

*தலைவன், தலைவியின் களவொழுக்கம் கற்பு வாழ்க்கைக்கு மாற ஒரு திருப்பு முனையாக உடன்போக்கு அமைகின்றது. சங்ககாலத்தில் உடன்போக்கு என்பது திருமணமுறைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. உடன்போக்கு மேற்கொள்ளும் தலைவன், தலைவி இருவரும் பாலைநிலத்தைக் கடந்து செல்கின்றனர். தலைவியின் இச்செயலை நினைத்து நற்றாயை விட அதிகமாக செவிலி புலம்புகின்றாள். செவிலியின் புலம்பலுக்கு பெரும்பான்மை கோடை காலத்தில் காணப்படும் பாலைநிலமும், சூழலும் காரணமாக அமைகின்றன. பாலைநிலத்தில் ஞாயிற்றின் வெம்மை, நிழலில்லாது உலர்ந்த மரங்கள், பரற்கற்களையுடைய நீரற்ற சிறுநெறிகள் இருத்தல் இயல்பாகும். தன்னுடைய மகள் தலைவனுடன் உடன்போக்கு சென்றாள் என்பதை செவிலித்தாய் அறிகின்றாள். தன் மகளுக்கு எவ்வித இன்னலும் நேராதபடி தெய்வங்களை வழிபட்டாள். பாலைநிலம் நிழலும், நீரும் தந்து காதலர்களின் பயணத்திற்கு*

*துணைபுரிய வேண்டும் என்று தெய்வத்திடம் வேணடுகின்றாள். அதற்கு மழை பெய்ய வேண்டும் என்று கூறுவதை,*

***மலைமுதல் சிறுநெறி மணல்மிகத் தாஅய்,***
***தண்மழை தலைய வாகுக!***
***(குறுந்தொகை, பா.378: 2 - 3)***

*என்ற அடிகள் குறிப்பிடுகின்றன.*

**புறவாழ்க்கை**

**நிலமும் தொழில்களும்**

*சுற்றுச் சூழல் மக்கள் வாழ்கின்ற வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. ஒவ்வொரு நிலத்திலும் பல்வேறு தொழில்கள் நடைபெறுகின்றன. சங்க கால தொழில்கள் யாவும் நிலத்தின் தன்மைக்கு ஏற்ப அமைந்திருந்தன. நிலம் என்பது உணவுப்பொருட்களை உள்ளடக்கியிருப்பதாகும். ஐவகை நிலங்களில் வாழும் மக்களின் தொழில்கள் யாவும் பெரும்பான்மை உணவு வளத்தின் அடிப்படையில் அமைந்திருந்தன. உணவுவளத்தைப் பெறுவதற்காக ஒவ்வொரு நிலத்திலும் உள்ள மக்கள் பாடுபட்டனர். சங்க காலத்தில் ஐவகை நிலங்களிலும் இயற்கையில் கிடைத்த உணவை உட்கொண்டனர். குறிஞ்சி நிலத்தில் தேன், கிழங்குவகைகள், தினை, வேட்டையாடிய காட்டுயிர்களின் இறைச்சி இவற்றை உணவாகக் கொண்டனர். குறிஞ்சிநில மக்களின் தொழில் தேன் எடுத்தல், வேட்டையாடுதல், தினைப்புனம் காத்தல், கிழங்கு அகழ்தல் ஆகும். மருத நிலத்தில் வேளாண்மை முதன்மைத் தொழிலாகும். இந்நில மக்கள் விதைவிதைத்தல், நாற்று நடுதல், களையெடுத்தல், கடாவிடுதல், நெல்லரிதல், வாயிலாக உணவு வளத்தை மேம்படுத்திக் கொண்டனர் இதற்குக் காரணம் நிலமும் நிலத்தின் தன்மையும் ஆகும். பாலைநில மக்கள் புல்லரிசி உணவினை உட்கொண்டனர். புல்லரிசி என்பது எறும்பு, கரையான் போன்ற உயிரினங்களால் புற்றுக்களில் சேகரித்து வைக்கப்பெற்ற அரிசியாகும். எயினர்கள் புற்றுக்களில் இருந்து இவ்வரிசியைக் கவர்ந்து வருவர்.*

**நிலமும் வேளாண்மை**

*மருதநிலத்தில் மட்டுமில்லாமல் முல்லை, குறிஞ்சி நிலங்களிலும் வேளாண்மை நடைபெற்றதுள்ளது. மருத நிலத்தில் நன்செய் வேளாண்மையும், முல்லை, குறிஞ்சி நிலங்களில் புன்செய் வேளாண்மையும் நடைபெற்றன என்று சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றது. பாலைநிலத்தில் எந்தவித வேளாண்மையும் செய்ய முடியாது. இதற்குக் காரணம் அந்நிலத்தின் தன்மை ஆகும்.*

**மலை அரணாக அமைதல்**

*ஒரு நாடு வளம் பெற இயற்கை வளங்கள் தேவையாகும். இன்றியமையாதத் தேவைக்கு மட்டுமில்லாமல் நாட்டிற்கு பாதுகாப்பாகவும் இயற்கை வளங்கள் விளங்குகின்றன. இயற்கை வளங்களில் ஒன்றான மலை சங்ககாலத்தில் அரணாக அமைந்து உள்ளது.*

*பண்டைநாள் அரசர் அரண்மனைகட்கு நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் என நான்கு வகை அரண்கள் அமைத்தல் வழக்கம் (முல்லைப்பாட்டு, மு.நூ., ப.கச).*

***வள்ளுவரும் இக்கருத்தை அடியொற்றி,***
***மணிநீரும் மண்ணு மலையும் அணிநிழல்***
***காடும் உடைய தரண் (திருக்குறள் எண்.742)***

*என்ற குறள் அடிகளில் வலியுறுத்துகின்றார்.*

*மலை நாட்டிற்கு உறுப்பாக அமைவதனால் இரண்டு விதங்களில் நன்மையாகும். அரணாக இருந்து பகைவர்கள் எளிதில் நாட்டில் புகுதல் இயலாமல் தடுத்து நிற்கும். மழைக்காலத்தில் உட்கொண்ட நீரை, வெயிற்காலத்திலும், வெளிப்படுத்தி ஆறுகளைத் தன்னிடம் இருந்து உற்பத்தி செய்து வரும். மேலும், மலைகள் இருந்தால் அகில், மிளகு, வாச னைப்பண்டம், வால்மிளகு, குங்குமம் ஆகிய பொருள்களைப் பெறலாம் (வள்ளுவர் கண்ட அரசியல், ப.9).*

*தற்காலத்தில் இந்தியாவிற்கு வடக்கு எல்லையாக இமயமலை விளங்குகிறது. எல்லையாக மட்டுமின்றி காவலாகவும்*

*இருக்கின்றது. சங்க காலத்தில் மன்னர்கள் மலைப்பகுதியை எல்லையாக வைத்து ஆட்சி செய்தனர். பாரி - பறம்புமலை, பேகன் - பொதினிமலை, ஆய் - பொதிகைமலை, ஓரி - முள்ளூர்மலை, அதிகன் - கொல்லிமலை, நன்னன் - ஏழில்மலை மற்றும் பாழிமலை, குமணன் - முதிரமலை, நள்ளி - தோட்டிமலை என்று மலையைத் தன்னகத்து கொண்டுள்ளனர். மலைப்பகுதி அரணாக இருந்தால் பகை நாட்டினர் எளிதில் நாட்டிற்குள் நுழைய முடியாது என்று எண்ணினர். இதனை,*

***வான் கண் அற்று,அவன் மலையே; ஆங்கு,***
***.. மரம் தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்,***
***புலம்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்***
***தாளின் கொள்ளலிர்: வாளின் தாரலன்:***
***யான் அறிகுவென், அது கொள்ளும் ஆறே***

***(புறநானூறு, பா.109 : 9 - 14)***

***உடன்றனிர் ஆயினும், பறம்பு கொளற்கு அரிதே***

***(புறநானூறு, பா.110: 2)***

*என்ற அடிகள் விளக்குகின்றன.*

*பாலை சுரம் சார்ந்த பகுதியாகும். வெம்மையும், காய்ந்த மரங்களும், பாறகற்களும் நிரம்பிய இடமாகக் காணப்படுகிறது. அங்கு நிலவும்பஞ்சம்அங்கு வாழும்மக்களைக்களவு, கொலை போன்ற கொடுஞ்செயல்களைச் செய்யத் தூண்டுகிறது. இவற்றிற்குக் காரணம் நீராதாரம் இல்லாத வறண்ட பாலைச் சூழலே எனலாம். வில்லை ஏராகவுடைய உழவர் ஆறலைக்கள்வர். இவர்கள் தொழில் வழிப்பறிச்செய்வதாகும்.*

*போர்த்தொழில் மூலம் வருவாய் பெற்ற மறவர், போர் நடைபெறாத காலங்களில் வளமற்ற பாலை வனத்திலும், காட்டு நிலங்களிலும் வாழ்ந்த இவர்கள். வேட்டையாடுதலையும் வழிப்பறி செய்தலையும் தொழிலாகக் கொண்டனர் போலும். வழிப்பறி செய்தமையால் இவர்கள் ஆறலைக்கள்வர் என அழைக்கப் பெற்றனர் (சங்க இலக்கியத் தேடல், ப.62)*

*ஆறலைக்கள்வர் பாலைநிலத்தில் மழை பெய்வதை வெறுத்தனர். மழை பெய்தால் தம்முடைய களவுத் தொழிலுக்கு இடையூறு ஏற்படும் என்று கருதினர். உயர்ந்த காட்டில் உள்ள கவர்த்த வழிகளையேயன்றி மழை வளத்தை விரும்பாதவர்கள்.*

**பண்டமாற்று**

*ஒரு நிலத்தில் கிடைக்கும் பொருள் அந்நிலத்திற்கு மட்டும் தனிப்பட்டு இல்லாமல் எல்லா நிலங்களில் உள்ள மக்களுக்கும் கிடைக்கும் வகையில் பண்டமாற்றுமுறை வழக்கில் இருந்தது.பண்டமாற்று என்பதை பண்டம் + மாற்று எனப் பிரித்து பொருள் கூறலாம். பண்டம் என்பது பொருள், தாரம் எனப் பொருள்படுகிறது. மாற்று என்பது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு மாற்றிக் கொடுப்பது என்று பொருளாகும். சங்க காலத்தில் பண்டமாற்றுமுறை வழக்கத்தில் இருந்தது. ஒரு நிலத்தில் விளைந்த பொருள் மற்றொரு நிலத்திற்கும் கிடைக்க பண்டமாற்று முறை, நிலவழி வாணிபம் வழி வகை செய்ததாக சங்க இலக்கியம் பகர்கின்றது. பண்டைக்காலத்தில் நடைபெற்ற பண்டமாற்று முறையை இருவகைப்படுத்தலாம். அவை ஒரு பொருள் வாங்க காசு கொடுப்பது ஒருமுறையாகும். மற்றொன்று ஒரு பொருளுக்கு மாற்றாக மற்றொரு பொருள் கொடுப்பது ஆகும். பண்டமாற்று என்பது ஒரு பொருளுக்கு மாற்றாக இன்னொரு பொருளைக் கொடுப்பதாகும். பண்டமாற்று முறையில் ஒரு பொருளுக்கு கொடுக்கப்படும் பொருள் அப்பொருளுக்கு நிகராகதான் மதிக்கப்பெற்றது. மருத நிலத்தில் வாழ்ந்த உழவர்கள் நெய்தல் நில மகளிரிடம் நெல்லைக் கொடுத்து அதற்கு மாற்றாக கள்ளைப் பெற்றுள்ளனர். இதனை,*

**வளம் செய் வினைஞர் வல்சி நல்க,**
***துளங்கு தசும்பு வாக்கிய பசும் பொதிந்த தேறல்***
***இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கள் தொறும்***
***பெறுகுவீர்***

***(மலைபடுகடாம், அடி. 462 - 464)***

*என்ற அடிகள் உணர்த்துகின்றன.*

*மேலும், பகை மன்னருடைய பசுக் கூட்டங்களை வீரர்கள் கவர்ந்து வருகின்றனர்.*

அக்கூட்டத்தில் இருந்த வீரன் ஒருவன் தான் கவர்ந்து வந்த ஆவினைக் கொடுத்து பழைய கள் விலைக் கடனைத் தீர்க்கின்றான். இதனை,

**கேளா மன்னர் கடிபுலம் புக்கு**
**நாள் ஆ தந்து நறவுகொடை தொலைச்சி**
**இல் அடு கள் இன் தோப்பி பருக**
**மல்லல் மன்றத்து மதவிடை கெண்டி**
**(பெரும்பாணாற்றுப்படை, அடி. 140 - 143)**

என்ற அடிகள் விளக்குகின்றன. மேலும், பசுக்களைப் கொடுத்து நெல்லைப் பெற்றள்ளனர். இதனை,

**புல்லுடை வியன் புலம் பல் ஆ பரப்பி,**
**வளனுடைச் செறுவின் விளைந்தவை உதிர்ந்த**
**களன் அறு குப்பை காஞ்சிச் சேர்த்தி,**
**அடணியல் ஆர்கை வன் கை வினைநர்**
**(பதிற்றுப்பத்து, பா. 62 : 13 - 16)**

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன.

மருதநிலத்தில் பாண்மகள் மீனுக்குப் பதிலாக பயற்றையும், வெண்ணெலையும் பெற்று வந்தாள். இதனை,

**முள் எயிற்றுப் பாண்மகள் இன் கெடிறு சொரிந்த**
**அகன் பெரு வட்டி நிறைய, மனையோள்**
**அரிகாற் பெரும் பயறு நிறைக்கும் ஊர!**
**(ஐங்குறுநூறு, பா.47 : 1 - 2)**

என்ற அடிகள் உணர்த்துகின்றன.

மேலும், குறிஞ்சி நிலத்தில் கிடைக்கும் உணவு தேனும் கிழங்கும் ஆகும். இப்பொருட்களை நெய்தல் நிலத்தில் பண்டமாற்றுச் செய்தனர். தேனும், கிழங்கும் கொடுத்து மீன் நெய்யையும், கள்ளையும் பெற்று வந்தனர். இதனை,

**தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்**
**மீன் நெய்யொடு நறவு மறுகவும்**
**(பொருநராற்றுப்படை, அடி.214 - 215)**

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன.

மருத நிலத்து மக்கள் முல்லைநிலத்து மக்களுடன் உணவை பரிமாறிக்கொண்டனர். மருதநிலத்துப் பொருளான தீம்சுவைக் கரும்பையும் அவலையும் முல்லைநிலத்தில் கொடுத்தனர். முல்லைநிலத்தில் கிடைத்த மானின் தசையோடு மதுவையும் வாங்கி வந்தனர். இதனை,

**தீங்கரும்போடு அவல் வகுத்தோர்**
**மான்குறையொடு மது மறுகவும்**
**(பொருநராற்றுப்படை, அடி. 216 - 217)**

என்ற அடிகள் விளக்குகின்றன.

வாணிபம் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வல்லதாகும் என்பதையும் அவை இருமுறைகளான நீர்வழியாகவும், நில வழியாகவும் நடைபெற்றுள்ளது. நிலவழி வாணிபம் என்பது நிலவழியே நடைபெறும் வாணிபத்தைக் குறிக்கின்றது. இதனை தரைவழி வாணிபம் என்று கூறுவர். இது ஒரிடத்தில் விளைந்த பொருட்களை கொள்முதல் செய்து வேறொரு இடத்திற்கு கொண்டு சென்று விற்பது ஆகும். நில வழி வாணிபம் சகடத்தின் (வண்டி) வழி நடைபெற்றது. உப்பு விளைவித்தல் தொழில் நெய்தல் நிலத்தில் நடைபெறும். உப்பு விளைவிப்பது நெய்தல் நில மக்களாக இருந்தாலும் உப்பைக் கொள்முதல் செய்து விற்பவர்கள் வேற்றுவர். உப்பு வாங்கி விற்பவர்களை சங்ககாலத்தில் உமணர் என்றழைத்தனர். இவர்கள் உப்பைக் கொள் முதல் செய்து வேறோர் இடத்திற்குச் சென்று விற்றனர். இதனை,

**சில்பத உணவின் கொள்ளை சாற்றிப்**
**பல்எருத்து உமணர் பதிபோகும் நெடுநெறி**
**(பெரும்பாணாற்றுப்படை, அடி.63 - 64)**
**நெல்லின் நேரே வெண்கல் உப்பு எனச்**
**சேரி, விலை மாறு கூறலின்**
**(அகநானூறு, பா.140 : 7 - 8)**

என்ற அடிகள் சுட்டுகின்றன.

## நிலத்திற்கான போர்

புற வாழ்க்கையில் மன்னர்கள் மண்ணாசை காரணமாக நிலத்தையும், நீரையும் மேலாண்மை செய்ய எண்ணினர். அதுமட்டுமின்றி பகை நாட்டை முன்னேற்றமடைய விடாமல் நல்ல வளமான மருத நிலங்களையும், நீர்த்துறைகளையும் பாழ்படுத்தவும் செய்தனர். மருதநிலம் வளம் மிகுந்த பகுதியாகும். வேளாண்மைக்கு உகந்த மண்ணும், நீர்வளமும் இருப்பதால் அந்நிலத்தை கைக்கொள்ளும் பொருட்டு போர் நிகழ்த்தப் பெற்றுள்ளது. நீர்வளத்தை அழித்தல், நிலத்தை பாழ்படுத்துதல் என்ற முறையில் போர்க் கொடுமைகள் சங்க இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வளமான வயலில் பன்றிகளை உழவிடுதல், நெருஞ்சி விதைத்தல், கழுதைகளை உழவிடுதல் போன்ற செயல்களையும் செய்துள்ளனர்.

**நிலவுடைமை**

நிலவுடைமை என்பது நிலத்தை தனிப்பட்ட ஒருவர் ஆளுமைச் செய்வதாகும். சங்க காலத்தில் நிலத்தை ஆண்டவர்களை நிலக்கிழார் என்றழைத்தனர். நிலத்தை தங்களுக்கென்று மட்டும் உரிமையுடையதாக வைத்துள்ளனர். இதனை,

***மாசுஇல் வான் முந்நீர்ப் பரந்த தொல் நிலம்***
***புணர்ந்த ஆளுங் கிழமை யொடு***
***எங்கோ வாழியர், இம் மலர் தலை உலகே!***
***(கலித்தொகை, பா.103 :77 - 79)***
***நாடு கண் அகற்றிய உதியஞ்சேரற்***
***பாடிச் சென்ற பரிசிலர் போல,***
***(அகநானூறு, பா. 65: 5 - 6)***

என்ற அடிகள் வழி அறிய முடிகிறது.

**நிலத்தைத் திறையாகக் கொடுத்தல்**

தன் நாட்டின் மீது படையெடுத்து வரும் மன்னனை எதிர்த்து போரிட முடியாமல் போரைத் தவிர்க்க முயலும் ஒரு வழிமுறை திறைச் செலுத்துவது ஆகும். இவை போர் மரபுகளில் ஒன்றாகும். இதனை "கப்பம் கட்டுதல்", "வரிசெலுத்துதல்" என்று கூறுவர். பொருள், பணம், நிலம் இவற்றைத் திறையாகக் கொடுத்தனர். நிலத்தைத் திறையாகக் கொடுத்ததை மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. பாதுகாப்பைத் தரும் அரணாகக் கொண்டு வாழ்ந்த அரசர்களைப் பாண்டிய மன்னன் வெற்றி கொண்டான். இதனை அறிந்த மற்ற அரசர்கள் தங்கள் நிலங்களைத் தாமாகவே முன்வந்து கொடுத்துப் பாண்டிய மன்னனை வணங்கினர். இதனை,

***இருபெரு வேந்தரோடு வேளிர் சாயப்***
***பொருது அவரைச் சொருவென்றும்***
***நிலம் தந்த பேர் உதவி***
***பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்***
***(மதுரைக்காஞ்சி, அடி.55 - 61)***

என்ற அடிகள் தெளிவுறுத்துகின்றன.

**நிலக்கொடை**

வேந்தருக்குரிய பண்பு தானம் வழங்குதல் ஆகும். போரில் வெற்றியை ஈட்டித்தந்த வீரர்களுக்கு நிலத்தைத் தானமாக தருதல் மரபாகும். இதனை,

***தண்ணடை நல்கல் வேந்தற்குக் கடனே***
***(புறநானூறு, பா.312: 4)***

என்ற அடி விளக்குகின்றது. குளிர்ச்சியுடைய நீர்நிலங்களைத் தகுதியறிந்து பரிசாக வழங்குதல் நாட்டை ஆளும் மன்னனுக்கு உரிய கடமையாகும். மலைச்சாரலினை உடைய பறம்பினைப் பாடுவார்க்கெல்லாம் பங்கிட்டுக் கொடுத்தான் பாரி. இதனை,

***பறம்பு பாடினரதுவே: அறம் பூண்டு***
***பாரியும், பாரிசிலர் இரப்பின்,***
***"வாரேன்" என்னான், அவர் வரையன்னே***
***(புறநானூறு, பா.108: 4 - 6)***
***ஆடினிர் பாடினிர் செலினே,***
***நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே***
***(புறநானூறு, பா.109:17 - 18)***

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. நிலந்தரு திருவிற்பாண்டியன், சேரர், சோழர் என்ற இரு பெருவேந்தர்களையும் வென்றவன் ஆவான். அதுமட்டுமின்றி வேளிரையும் வென்று அவர்கள் நாட்டையும் பாண்டிய நாடாக்கினான். நிலத்தை வென்று விரிவாக்கியதால் நிலந்தரு திருவிற் பாண்டியன் என்ற பெயர் பெற்றான். கடல் கோள்களால் தென்பகுதி குறைய, பாண்டியருக்காக இருபெரு வேந்தரையும் வென்றான் என்று ச. வே. சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். இதனை,

***நிலம்தந்த பேர்உதவி***
***பொலந்தார் மார்பின் நெடியோன் உம்பல்!***
***(மதுரைக்காஞ்சி, அடி.60 - 61)***

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன.

**முடிவுரை**

சங்க கால மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். அவர்களின் அக, புற வாழ்க்கையில் இயற்கையோடு கொண்டிருந்த தொடர்பினை சங்க இலக்கியங்கள் வழி அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் நிலம் எல்லாவற்றிற்கும் காரணமாக அமைந்ததையும் சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது.

**சதுணைநூற்பட்டியல்**


1. அழகேசன், சு. (ப.ஆ)., தொல்காப்பியம், சுதா பதிப்பகம், தூத்துக்குடி, 2008.
2. ஆலிஸ், அ. (உ.ஆ.), பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
3. சுப்பிரமணியன், பெ., (உ.ஆ.), பரிபாடல், நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004.
4. செயபால், இரா. (உ.ஆ.), அகநானூறு (முதல் தொகுதி), நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
5. செயபால், இரா. (உ.ஆ.), அகநானூறு (இரண்டாம் தொகுதி), நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
6. சோமசுந்தரனார், பொ. வே., முல்லைப் பாட்டு, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1970.
7. தட்சிணாமூர்த்தி, அ. (உ.ஆ.), ஐங்குறுநூறு (முதல்தொகுதி), நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
8. தட்சிணாமூர்த்தி, அ. (உ.ஆ.), ஐங்குறுநூறு (இரண்டாம்தொகுதி), நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
9. நாகராஜன், வி. (உ.ஆ.), குறுந்தொகை (முதல்தொகுதி), நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
10. நாகராஜன், வி. ஆ.), குறுந்தொகை (இரண்டாம்தொகுதி), நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
11. பாலசுப்பிரமணியன், கு. வெ. (உ.ஆ.), நற்றிணை, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
12. பாலசுப்பிரமணியன், கு. வெ. (உ.ஆ.), புறநானுறு(முதல்தொகுதி), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
13. பாலசுப்பிரமணியன்,கு.வெ.(உ.ஆ.), புறநானுறு (இரண்டாம்தொகுதி), நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
14. மாதையன், பெ., அகத்திணைக் கோட்பாடும் சங்க அகக்கவிதை மரபும், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2009.
15. மாணிக்கம், வ.சுப., தமிழ்க்காதல், பாரிநிலையம், சென்னை, 1986
16. மோகன், இரா., (உ.ஆ.), பத்துப்பாட்டு (பகுதி 1), நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
17. மோகன், இரா. (உ.ஆ.), பத்துப்பாட்டு (பகுதி 2), நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.
18. விசுவநாதன், அ. (உ.ஆ.), கலித்தொகை, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ் (பி)லிட், சென்னை, 2004.